ம..சா.3 ராமானுஜம், த/பெ. நம்பி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ மெக்கானிக்கல் இஞ்சினியரிங். நான் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.2 ஆவண மனுதாரர் முகவரியில் C/O ராமானுஜம் நம்பிதாஸ் என்று காண்பிக்கப்பட்டுள்ள நபர் தான் என்று சொன்னால் சரிதான். மனுதாரருக்கு திருமணத்தின்போது 100 பவுன் நகை சீதனமாக கொடுக்கப்பட்டதற்கு எந்தவிதமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நகைக்குரிய எண்ணம், எடை போன்ற விவரங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சீதனமாக ரூ.5 இலட்சம் ரொக்கம், சீர்வரிசை கொடுக்கப்பட்டதற்கு எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ரூபாய் கொடுக்கும்போது நான் இருந்தேன். மேற்படி விவரத்தை நானோ, மனுதாரரோ நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரை கைவிட்டுவிட்டு சென்றபோது எதிர்மனுதாரர் வீட்டில் மனுதாரர் போட்டுக்கொண்டு போன நகைகளை தவிர வீட்டிலிருந்த மனுதாரர் நகைகளை எதிர்மனுதாரர் மாண்புமிகு நீதிமன்றத்தில் மனுதாரர் முன்பு சமர்ப்பிக்க தயாராக உள்ளார் என்றால் நகைகளை திரும்ப கொடுத்தால் வாங்கிக்கொள்கிறோம். நான் திருமண நிச்சயதார்த்திற்கு சென்றேன். யார் யார் வந்திருந்தார்கள் என்றால் கல்யாணத்திற்கு முந்தைய நாள் மாலையில் சுமார் 50 பேர் வந்தோம். திருமண சமயத்தில் மனுதாரர் எங்கு வேலை பார்த்தார் என்றால் சென்னை இன்போசிஸ் நிறுவனத்தில் வேலை பார்த்தார். திருமணத்திற்கு பின் மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் கோயம்புத்தூரில் உள்ள வீட்டில் வசித்து வந்தார்கள் என்று நான் வழக்கிற்காக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பாராவில் கூறியுள்ளதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. 5 வது பாராவில் கூறியுள்ள

அனைத்து சம்பவங்களையும் நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பார்த்துள்ளேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சம்பவங்களை நான் நேரில் பார்த்ததாக மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி சம்பவங்கள் நடக்கும்போது நான் உடன் இருந்தேன் என்று கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போன்று மனுதாரர் குழந்தை பிறப்பின் போது உடன் இருந்தேன், கோயம்புத்தூரில் நடந்த சம்பவத்தின் போது நான் உடன் இருக்கவில்லை. நான் 5 வது பாராவில் கூறியுள்ள செய்திகள் அனைத்தும் செவி வழிசெய்தி என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழுமாறு பலமுறை அறிவுறுத்தினேன் என்று கூறுவதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை ஆனால் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தாயாரை சந்தித்து கோரினேன். மேற்படி மனுதாரர் அவரது நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர், மனுதாரரை உதாசினப்படுத்தியதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தனதுமகனை பார்த்துக்கொள்ள தயாராக இருக்கிறாரா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. மனுதாரர் தற்போது எங்கு வசிக்கிறார் என்று எனது நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். கோவிட் சமயத்தில் எங்கள் வீட்டில் தான் வசித்து வந்தார். அதனால் தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம். மனுதாரரின் குழந்தை எந்த பள்ளியில், எந்த வகுப்பில், எந்த ஊரில் இருக்கிறார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எனது சாட்சியம் செவி வழி சாட்சியமாக இருப்பதால் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எச்எம்ஓபி 11/2021 மணவாழ்கை மீட்டெடுப்பு வழக்கு மேலும் அசல் வழக்கு 215/2021 ஜீவனாம்ச வழக்கு இரண்டும் தள்ளுபடி செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து

வழக்கு எச்எம்ஓபி 154/2021 அனுமதிக்கதக்கது என்று சொன்னால் மறுக்கிறேன்.

(ஒம்)ஏ.பிஸ்மிதா,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.